**ருவன்வெல்ல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மே 21 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 22 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் ருவன்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) **கணக்கீடு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைத்த ரூபா 35,155 ஆன பெற்ற கழிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெற்ற கழிவை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நூலக புத்தகங்களுக்காக பெற்ற கழிவு ரூபா 35,155 பெறுமதியினை 2019 ஆண்டிற்கான இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | இரண்டு காணி பதிவாளர் அலுவலகங்களில் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் முத்திரை கட்டண ஊக்குவீப்பு முறையே ரூபா 92,000 மற்றும் 41,100 இற்காக கடன் கொடுத்தோர் ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒவ்வொறு ஆண்டினதும் முத்திரைக் கட்டண அட்டவணை சில வருடங்களின் பின்னறே அனுப்பப்படுவதுடன் கடன் கொடுத்தோர் ஒதுக்கீடு ஏற்படுத்துவது கடினமாகவுள்ளது. எனினும் எதிர்வரும் ஆண்டில் அவ்வாறு கடன் கொடுத்தோர் ஒதுக்கீடு அண்மித்தளவிளேனும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கடந்த ஆண்டிற்காக கணக்காய்வுக் கட்டணம் ரூபா 210,679 மீளாய்வாண்டில் செலவினமாக கணக்கீடு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன்கொடுனர் ஏற்பாடு செய்திருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஒதுக்கீடு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். | அட்டுறு அடிப்படையில் கடந்த ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டில் ஏற்பட்ட செலவாக கணக்கீடு செய்தலும் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்தை உரிய ஆண்டினுள் செலவாக கணித்து கடன்கொடுனர் ஏற்பாடு செய்தலும் குறைபாடாக இனங்காணப்பட்டது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

**-------------------------------------------**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பண்டகக் கணிப்பீட்டு அறிக்கையின் படி 05 கணக்கு விடயங்களின் கூட்டுத் தொனை ரூபா 115,296,248 ஆன போதும், நிதிக் கூற்றுக்களின் படி அப் பெறுமதி ரூபா 117,838,619 ஆனமையால் ரூபா 2,542,653 ஆன வித்தியாசமானது. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மின் பண்டக இருப்பு, நூலக புத்தகங்கள், வாகனங்கள் இயந்திரங்களின் பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களின் படியான வித்தியாசம் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2019 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய விடய உத்தியோகத்தர் அறிவூட்டப்பட்டதுடன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 113,750 ஆன ஔடதங்களின் இருப்பு பொது பண்டக இருப்பாகும் எனவும் அறிவிக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் 14 கணக்கு மீதிகளின் கூட்டு பெறுமதி நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 195,866,866 வும் மற்றும் துணைப்பதிவேடுகள் பிரகாரம் ரூபா 191,041,881 வும் ஆனதால் ரூபா 4,824,977 வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீளாய்வாண்டு இறுதியில் 14 கணக்கு விடயங்களின் பெறுமதி மற்றும் அதனுடன் தொடர்புடைய அட்டவணைகளிற்கிடையிலான வித்தியாசத்தை கண்டறிந்து 2019 ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(இ) தொங்கள் கணக்கு**

**கணக்கீடு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 தகதிக்கு ரூபா 947,227 ஆன தொங்கள் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வெண்டிய கணக்குகள்**

(i) **பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 2,278,674 ஆனது. | பெற வேண்டிய பணம் துரிதமாக சேகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | ருவன்வெல்ல பிரதேச செயலகத்தில் 05 கருத்திட்டங்களில் இரண்டிற்காக ஒதுக்கீடு எமக்கு தரப்பட்டுள்ளதுடன் எஞ்சிய ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. நிலுவை இறைச்சி, மீன் கடை வாடகை, தண்டப்பணம் மற்றும் மலசலகூட கட்டணத்தை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிலுவை பொதுச்சந்தை கடையறை வாடகை மற்றும் தண்டப்பணம் ரூபா 152,890 மற்றும் சந்தையல்லாத கடையறை வாடகை ரூபா 502,517 யினை 2019 ஜுலை 19 வரை அறவிடப்பட்டுள்ளது மீதியை செலுத்துமாறு குத்தகைகாரர்கள் அறிவூட்டப்பட்துடன் நிலுவை ரூபா 24,500 ஆன அனுமதிப்பத்திர கட்டணத்தலிருந்து ரூபா 1,000 அறவிடப்பட்டது. |

(ii) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 திகதிக்கு ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டடிய கணக்கு மீதிகளின் கூட்டு பெறுமதி ரூபா 8,690,445 ஆனது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2006 முதல் 2016 வரை நாநாநவித வைப்பின் கீழ் ரூபா 1,168,442 ஆன தொகை தற்போது மீதியாக உள்ளது. இப் பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) 154 பிரிவு மற்றும் 2005 ஜுன் 01 திகதிய 2005/04 உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை. | 2010 முதல் 2016 வரை துண்டாக்கி வற்கப்பட்ட 41 ஏக்கர் 24 பர்சஸ் ஆன 12 காணி துண்டுகளிற்குரிய உள்ளசாறான விற்பனையின் மீது அறவிட வேண்டிய கட்ணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 காணி துண்டுகளின் உறுதி விபரங்களை கண்டறிய முடியாதயதடன் 02 காணி துண்டுகளின் உறுதி விபரங்களை வருமான பரிசோதகரிற்கு அனுப்பி காணி விற்பனை வரியை தீர்மானித்துள்ளது. ஓர் காணியின் அளவை திட்டம் அங்கீகரிக்கப்படவில்லை. மேலும் காணியொன்றில் புற்கள் வழர்ந்துள்ளதுடன் எவறேனும் வசித்திருக்கவில்லை. இன்னும் ஓர் காணியின் விற்கப்பட்ட காணி துண்டுகளின் விபரம் வருமான பரிசோதகரிற்கு வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) 158(i) பிரிவு | 2018 திசெம்பர் 31 திகதியன்றும் நிலுவையாக காணப்பட்ட ரூபா 976,385 ஆன வீத வரி மற்றும்ஏக்கர் வரி தொடர்பாக சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கைக எடுக்க வெண்டும். | நிலுவை வீத வரி மற்றும் ஏக்கர் வரி அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதுடன் பழைய வீத வரி மதிப்பீட்டில் நிலவிய சொத்துக்கள் புதிய வீத வரி மதிப்பீட்டின் போது அகற்றப்பட்டுள்ளதால் அவ் அகற்றப்பட்ட சொத்துக்களில் நிலவும் நிலுவை தொகையை பதிவழிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வருமான பரிசோதகர்களிற்கு கள அறிக்கையை பெற்றுதருமாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (ii) நிதிப் பிரமாணம் 371(2) (இ) | 2018 ஆண்டினுள் 20 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 303,727 ஆன முற்பணம் 7 தினங்கள் முதல் 162 வரை தாமத காலத்தினுடன் தீர்க்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கைக எடுக்க வேண்டும். | அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களிற்கு நிதிப் பிரமாணம் 371(2)(இ) பிரகாரம் முற்பணம் பெறப்பட்டதன் பின் அவ் வேலை முடிந்த உடன் தீர்க்கப்பட வேண்டுமென 2019 மே 23 ஆம் திகதி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| | (ii) நிதிப் பிரமாணம் 371(5) | அனைத்துக் உபகட்டு நிதியையும் குறித்த ஆண்டின் திசெம்பர் 31 திகதிக்கு தீர்க்க வேண்டிய போதும் 2001 ஆண்டிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 625,651 மற்றும் 2012 இற்கும் 2018 இற்குமிடையிலான காலத்தினுள் தீர்க்கப்படாத ரூபா 534,282 ஆன முற்பணம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | 18 வருடங்களை விஞ்சிய காலம் முதல் நிலவும் ரூபா 625,651 ஆன தீர்க்கப்படாத முற்பண மீதி தொடர்பாக எவ்வித பதிவேட்டினையும் கண்டறிய முடியாதிருந்ததுடன் இம் மீதி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடரபாக உள்ளுராட்சி ஆணையாளரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. ரூபா 534,282 ஆன தீர்க்கப்படாத முற்பணம் தொடர்பாக பதிவேடுகளில் காணப்படும் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) நிதிப் பிரமாணம் 571 | 2006 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 1,056,378 ஆன மீள் செலுத்தாத வைப்புகள், நானாவித வைப்புகள் மற்றும் மற்றும் டென்டர் பிணை தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 திகதி ரூபா 2,648,822 ஆன தொகையொன்று அரச வருமானத்திற்கு எடுக்கப்பட்டது. தொடர்ந்தும் வைப்புப் பதிவேட்டில் காணப்படும் வைப்புப் பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,478,780 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,853,382 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 3,187,000 | 4,259,303 | 3,102,285 | 1,157,018 | 3,288,000 | 2,785,317 | 2,335,381 | 449,932 |
| ii | வாடகை | 9,041,200 | 12,339,336 | 8,574,231 | 3,765,105 | 9,627,000 | 7,737,570 | 7,563,928 | 173,642 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 610,100 | 677,460 | 677,460 | - | 535,100 | 535,100 | 535,100 | 636,517 |
| iv | ஏனைய வருமானம | 72,954,800 | 66,077,240 | 45,929,762 | 20,147,480 | 18,760,000 | - | 9,420,165 | - |

**2.2.2 வீத வரி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை 12 வருடங்களாக முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இனங்கண்டு புதிதாக பெறுமதி மதிப்பீடு செய்து வீத வரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் கழிவுப் பொட்களை வெளியிடும் பிரச்சினைக்கு நிலையான தீர்வு கிடைக்கும் வரை பிரதேசங்களில் வீத வரி அமுல்படுத்தலை தற்காலிகமாக இடை நிறுத்தியிருந்தது. | வீத வரி அறவிட முடியுமான பிரதேசங்களை இனங்கண்டு புதிய பெறுமதி மதிப்பீட்டை மேற் கொண்ள்ள மற்றும் கழிவுப் பொட்களை வெளியிட தீர்வை தேடிக் கொண்டு இடை நிறுத்திய வீத வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதற்காக பொருத்தமான காணியொன்றை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினூடாக எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் கழிவுப் பொட்களை வெளியிடும் முறைமையை செயற்படுத்த முடியுமாகையால் எதிர்காலத்தில் வீத வரி அறவிட முடியுமான பிரதேசங்களை இனங்கண்டு புதிய பெறுமதி மதிப்பீட்டை மேற் கொண்டு வீத வரி அறவிடும் பிரதேசங்களை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது சந்தை இறைச்சிக் கடை மற்றும் மீன் கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 5,304,688 ஆன நிலுவை வாடகை அறவிட வேண்டியதாக இருந்தது. | வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 திசெம்பர் 31 திகதிக்கு பொது சந்தை நிலுவை கடை வாடகை ரூபா 4,872,370 மற்றும் பொது சந்தையல்லாத நிலுவை கடை வாடகை ரூபா 1,372,625 ஆனது. அவற்றில் பொது சந்தையல்லாத நிலுவை கடை வாடகையிலிருந்து 2018 ஆண்டில் ரூபா 284,600 மற்றும் 2019 ஆண்டில் ரூபா 502,517 உம் அறவிடப்பட்டது. பொது சந்தை வாடகையிலிருந்து ரூபா 152,890 உம் 2019 ஆண்டில் அறவிடப்பட்டது. |

**2.2.4 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 22 திகதி இலக்க 2051 வர்தமானி அறிவித்தல் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்தினுள் உள்ள அபிவிருத்தி செய்யப்படாத | தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் செயற்பட வேண்டும். | அதிகார பிரதேசத்தினுள் உள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளிற்காக 0.5 சதவீத வரியொன்றை அறவிட வர்தமானியில் பிரசுரிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| காணிகளின் மூலதன பெறுமதியில் 0.5 சதவீத வரியொன்றை அறவிடுவதற்கு திட்டமிட்டிருந்த போதும், மீளாய்வாண்டினுள் அவ்வாறான காணிகளை இனங்காணுவதற்கு ஆய்வொன்றேனும் மேறகொள்ளப்பட்டிருக்கவில்லை. | | போதும் இந் நடவடிக்கைகள் இது வரை மேற் கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக உயர் அதிகாரிகளின் ஆலோசனை மற்றும் வழி காட்டலின் கீழ் அவ்வாறான காணிகள் தொடர்வில் ஆய்வொன்றை மேற் கொண்டு அறவிட முன் நடவடிக்கை மேற் கொள்வதாக குறிப்பிடுகிறேன். |

### 2.2.5 விளம்பர அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டின் 72 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 172,892 யினை அறவிட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிலும் வியாபார அறிவித்தல் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறிவித்தல் பலகை தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு தகவல்களை பெற்றுக் கொண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.6 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 17,152,889 மற்றும் ரூபா 30,015,547 ஆனது. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 17,152,889 இல் ரூபா 8,739,880 தொகை 2019 பெப்ரவரி 18 ஆம் திகதி சபைக்கு கிடைத்துள்ளது. எஞ்சிய தொகையை (2018 ஆண்டிற்கு) பெற்றுக் கொள்வதற்கு இரத்தினபுரி மாகாண சபைக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. கடந்த 05 ஆண்டுகளிற்குரிய முத்திரைக் கட்டணத்தை வரவழைத்துக் கொள்ளவும் எனைய வருடங்களிற்கான முத்திரைக் கட்டணத்தை பதிவழிப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) துணைச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 592 இலக்க மற்றும் 1990 சனவரி 05 திகதிய வர்த்தமாணி ஊடாக அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 04 பிரதான விடயங்களை செய்வதற்காக துணைச் சட்டம் விதிக்கபட வேண்டி போதும் 2018 திசெம்பர் 31 வரை 02 துணைச்சட்டங்கள் மாத்திரம் விதிக்கபட்டிருந்தன. | துணைச் சட்டங்களை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 04 துணைச் சட்டங்களின் இரண்டு 2018 ஆகஸ்ட் 10 மற்றும் 2018 ஒக்தேபர் 12 திகதிய வர்த்தமாணியின் பிரசுரிக்கப்பட்டதுடன், எஞ்சிய இரண்டு துணைச் சட்டங்களையும் தயாரித்து மொழிபெயர்ப்பிற்காக அனுப்பப்பட்டது. |

### (ஆ) கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மலசல கழிவுகளை வெளியிடுவதற்கு உரிய இடமொன்று இல்லாததால் வாடிக்கையாளர்களுக்கு மலசல கழிவுவகற்றும் சேவையை வழங்குவதற்கு முடியாமலிருந்ததுடன் சபைக்கு சொந்தமான கலி பவுசரயையும் பயன்படுத்த முடியாமலிருந்தது. | கழிவு பொருள் முகாமைக்கு துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசரு கருத்திட்டத்தின் கீழ் ரூபா 18,089,500 செலவில் இதல்பொல கழிவுப் பொள் முகாமை மையமொன்று 2014 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது அங்கு கொம்போஸ்ட் முறைமை செயற்படுத்தப்படுகிறது. உக்கடையாத கழிவுகளை வெளியிட மற்றும் மலசல கழிவுகளை வெளியிட |

| | | |
|---|---|---|
| | | பொருத்தமான இடமொன்றை, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு சபைக்கு ஒப்படைத்துள்ளது. எதிர்காலத்தில் உக்கடையாத மற்றும் மலசல கழிவுகளை வெளியிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 127 மற்றும் உள்ளவாறான ஆளணி 104 ஆனதுடன், 25 வெற்றிடங்கள் மற்றும் 2 மிகையும் ஆனது. இதற்கு மேலதிகமாக 16 பேர்கள் ஒப்பந்த அடிப்படையிலும், 4 பேர்கள் அமைய அடிப்படையிலும், 5 பேர்கள் வேறு ஆட்சேர்ப்பதும் ஆனது. சபையின் செயலாளர் பதவிற்கு 2017 ஜுன் 30 ஆம் திகதி முதல் பதில் கடமை அடிப்படையின் கீழ் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | வெற்றிடங்ளை நிரப்ப வேண்டியதுடன் மிகை ஊழியர்களை முறையாக்கிக் கொள்ள வேண்டும். | 08 வெற்றிடங்கள் நிலவுவதுடன் மேலதிக உத்தியோகத்தர் இரண்டு பேர் உள்ளது. அதிகார பிரதேசத்தினுள் கழிவு பொருள் முகாமைத்துவத்தை முறையாக்குவதற்காக உள்ள ஊழியர்கள் எண்ணிக்கை போதுாமையினால் 16 சுகாதார தொழிலாளர்களும், சுடளை கட்டுப்பாட்டாளர் மற்றும் சுடளை உதவியாளராக 02 பதவிகளில் சேவை ஒப்பந்தத்தின் மீது ஈடுபடுத்தியுள்ளனர். நி.பி.71 இன் பிரகாரம் இந்த பதவிகள் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. |

### (ஆ) ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இடமாற்றம் பெற்று சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் சேவையை விட்டுச்சென்ற, 06 ஊழியர்களிடமிருந்து 2002 முதல் 2013 வரை காலத்திற்குரிய அறவிட | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்புடைய ஆறு ஊழியர்களின் ஊழியர் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திதருப்பதாக குறிப்பிடுகிறேன். |

| | | |
|---|---|---|
| வேண்டிய ஊழியர் கடன் ரூபா 128,956 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகாரி சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள 11 நிறுவனங்களினால் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திர கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகாரி சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட 11 வியாபார தளங்களின் 04 வியாபாரங்களிற்காக வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டுள்ளதுடன்,எஞ்சிய வியாபாரங்களிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமை**

**3.4.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 மற்றும் 2016 இடையிலான காலத்தினுள் விளைவற்றதாக இருந்த பெறுமதி ரூபா 7,478,100 ஆன 11 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களில் 06 வாகனங்கள் மற்றும் 3 இயந்திரங்களை பராதீனம் செய்யுமாறு 2016 ல் பொருள் மெய்மை ஆய்வு குழு பரிந்துரைத்திருந்த போதும், பதிவு சான்றிதழ் உள்ளிட்ட சட்டரீதியான பதிவேடுகள் காணாமல் போயுள்ளமை அல்லது வாகனங்கள் வழங்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து உறுத்துரிமை | பொருள் மெய்மை ஆய்வு குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் பதிவுச் சான்றிதழ்களின் மூல பிரதிகளை தேடிக் கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன், உரிமையை சுவீகரிக்காத வாகனங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

சுவீகரிக்கப்படாமையினால் அச் செயல்கள் பூர்த்தி செய்ய முடியாமலிருந்தது.

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 7,862,365 பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதனை உரிய முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 (நிதி மற்றும் நிருவாக) விதி 168 (1) பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் அடுத்த ஆண்டில் மார்ச் 31 தகதிக்கு முன் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்கள் 2019 மே 21 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உரிய திகதிக்கு நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதன் பின்னர் நிதிக் கூற்றுக்களை ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 திகதிக்கு முன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 2018 திசெம்பர் மாதத்தினுள் ஓர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உரிய | 2019 இரண்டாம் காலாண்டிற்காக முகாமைத்துவ குழு 2019 ஜுலை 12 திகதி நடாத்தப்பட்டதுடன், அவ் அறிக்கை 2019 ஆகஸ்ட் மாதம் |

| | | |
|---|---|---|
| மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | முறையில் நடாத்ததுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கௌரவ மகா சபையிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4.3 திர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாநாவித வேலைகள் மேற்கொள்வதற்காக கிடைத்திருந்த ரூபா 2,368,062 அவ் வேலைகளை மேற்கொள்ளாமல் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இப் பணத்தால் குறித்த வேலைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலகம், ருவன்வெல்ல- இம்புல்கொட பொது இடுகாட்டை சுவீகரித்திக்கொள்ளள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை – பிலிசரு கருத்திட்டத்தின் கொம்பொஸ்ட் கருத்திட்டத்திற்காக வைப்பு பதிவேட்டின் உள்ளடங்கிய தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |